Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper
ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 · இதழ் Issue : 012 · ஞாயிற்றுக்கிழமை Sunday · 12.04.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

# “திரிணமூல் அரசின் ஊழல்கள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடப்படும்”



## பிரதமர் நரேந்திர மோடி உறுதி

பூர்ப பர்தமான்: திரிணமூல் காங்கிரஸ் அரசின் ஊழல்கள் மீது நடவடிக்கை எடுப்பதை உறுதிசெய்ய, பாஜக ஒரு வெள்ளை அறிக்கையை கொண்டுவரும் என்று பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்தார்.

மேற்கு வங்க மாநிலம் பூர்ப பர்தமானில் நடந்த பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி, திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர்கள்,அமைச்சர்கள் மற்றும் சிண்டிகேட்கள் தொடர்புடைய ஊழல்கள் மீது நடவடிக்கை எடுப்பதை உறுதிசெய்ய, பாஜக ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிடும். இது திரிணமூல் அரசாங்கத்தின் 15 ஆண்டுகால முழு விவரத்தையும் முன்வைக்கும். இத்தகைய ஒவ்வொரு குற்ற த்தையும் தடுக்க பாஜக ஆட்சியில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். எங்கெல்லாம் அதிக வாக்குப்பதிவும், பெண்களின் அதிகமான வாக்குகளும் பதிவாகிறதோ, அங்கெல்லாம் பாஜக - தேசிய ஜனநாயக கூட்டணிக்கு மிகப்பெரிய மக்கள் ஆணை கிடைத்து ள்ளது. கேரளாவில், எல்டிஎஃப் மற்றும் யுடிஎஃப் ஆகிய இரு கூட்டணிகளும் தாங்கள் வெற்றி பெறுவோம் என்று கூட உரிமை கோராத ஒரு சூழல் நிலவுகிறது. மேற்கு வங்கத்திலும்,பாஜக வெற்றியை நோக்கித் தொடர்ந்து முன்னேறி வருகிறது. உங்கள் உற்சாகமும், செயல்பாடுகளுமே அந்த வெற்றியை உறுதி செய்கின்றன பாஜகவுக்கு மேற்கு வங்கத்தில் பெருகிவரும் ஆதரவைக் கண்டு,திரிணமூல் காங்கிரஸ் பீதியடைந்து ள்ளது, இதனால் பொய்களைக் கூறி மக்களைத் திசைதிருப்ப முயற்சி க்கிறது.தி ஊழல் கடையை பாஜக மூடிவிடும் என்பதில் நீங்கள் உறுதியாக இருக்கலாம். மேற்கு வங்கத்தின் சகோதரிகளுக்கும்,மகள்களுக்கும் ஒரு உறுதிமொழியை அளிக்கவே நான் இங்கு வந்துள்ளேன். மேற்கு வங்கத்தில் பெண்களுக்கு மாதம் ரூ.3,000 நிதியுதவி அளிக்கப்படும்.

# மத்திய பார்வையாளர்களுடன் தலைமை தேர்தல் ஆணையர் ஆலோசனை: தேர்தலை சுதந்திரமாக நடத்த அறிவுறுத்தல்




சென்னை:

தமிழகத்தில் ஏப்.23-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் பொது பார்வை யாளர்கள் 136 பேர், செலவின பார்வை யாளர்கள் 150 பேர், காவல் பார்வை யாளர்கள் 40 பேர் என 326 பார்வை யாளர்கள் மற்றும் சிறப்பு செலவின பார் வை யாளர் ஆகியோர் தேர்தல் ஆணையத் தால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகம் முழுவதும் பணியமர்த்தப்பட்டுள்ள மத்தியப் பார்வையாளர்களு க்கான (பொது , காவல் மற்றும் செலவினப் பார் வையாளர்கள் ) ஆய்வுக் கூட்டம் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தலைமையில் டெல்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் தேர்தல் ஆணையர்கள் எஸ்.எஸ்.சாந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகியோர் பங்கேற்றனர். தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் மற்றும் மத்திய பார்வை யாளர்கள் 327 பேர் காணொலி காட்சி வாயிலாககலந்துகொண்டனர்.

இக் கூட்டத்தில் தலைமை தேர்தல் ஆணை யர் ஞானேஷ்குமார் அறிவுறுத்திய தாவது: எவ்வித வன்முறையுமின்றி,திருவிழா மனநிலையோடு சுதந்திர மாகவும், நேர்மை யாகவும் தேர்தல் நடத்தப்படுவதை மத்திய பார்வையாளர் கள் உறுதி செய்ய வேண்டும்.

தேர் தல் நடத்தை விதிகளை தீவிரமாக அமல் படுத்த வேண்டும். விதி மீறல்கள் குறித்த புகார்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பார்வையாளர்கள் தங்களது தொடர்பு எண்களையும், பொதுமக்கள், அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் அல்லது அவர்களது முகவர் களிடமிருந்து புகார்களை பெறுவதற்கான இடம் மற்றும் நேரத்தையும் நன்கு விளம்பரப்படுத்த வேண்டும். வாக்குச்சாவடி தலைமை அலுவலர் களுக்கான பயிற்சிகள் முறையாக வழங்கப்பட்டுள்ளதா என்பதை மேற் பார்வையிட வேண்டும்.

இணை யவழி ஒளிபரப்பு

வா க்குச்சாவடிகளில் கைபேசி யை பாதுகாப்பாக வைக்கும் வசதி மற்றும் வரிசையில் காத்திருக்கும் வாக்காளர்கள் அமர்வதற்கான வசதி உள்ளிட்ட குறைந்தபட்ச அடிப்படை வசதிகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

மாக, அனைத்து வாக்குச் சாவடிகளிலும் போதுமான குடிநீர் மற்றும்நிழல்வசதிகள் செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்த வேண்டும்.

இணைய வழி ஒளிபரப்பு ( Web cas ting) கண்காணிப்பு கட்டுப்பாட்டு அறைஏற்பாடுகள் முறையாகச் சரிபார்க்கப்பட வேண் டும் . இவ் வாறு அவர் அறிவுறுத்தினார்.

# ராமதாஸ் அணிக்கு புதிய சின்னம்: 30 தொகுதிகளில் சிலிண்டர் போட்டி






தமிழக சட்டமன்ற தேர்தல் வரும் ஏப்ரல் 23 ஆம் தேதி நடைபெற உள்ளது.ராமதாஸ் மற்றும் அன்புமணிக்கு இடையே மோதல் போக்கு தேர்தல் சமயத்தில் முடிவு எட்டப்படும் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது.ஆனால் யாரும் எதிர்பாராத விதமாக பாமக நிறுவனர் ராமதாஸ் சசிகலாவுடன் இணைந்து புதிய கூட்டணியை அமைத்து தேர்தலை சந்திக்க உள்ளார்.

முன்னதாக அன்புமணி தரப்பு பாமக அதிமுகதலைமையில்தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கும் பாமகவுக்கு 18 தொகுதிகள் ஒதுக்கப்பட்டு உள்ளது. பாமக பொறுத்தவரை கூட்டணியில் இடம்பெற்றால் 30 தொகுதிகள் வரை போட்டியிடும். அதேபோல் இந்த முறையும், தந்தை , மகன் பிரச்சானைகளுக்கு அப்பாற்பட்டு,ராமதாஸ் கட்சியை வலுப்படுத்த அதிமுகவுடன் இணைவார் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது. இதற்காக பாஜக தரப்பில் இருந்தும் அதிமுக தரப்பில் இருந்தும் முக்கிய புள்ளிகள் ராமதாஸுடன் கூட்டணியில் இணைய பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.இதற்கு ராமதாஸ் மறுப்பு தெரிவித்தாக கூறப்படுகிறது.

தமிழக அரசியலில் வன்னியர் வாக்கு வங்கி என்பது குறிப்பாக வட தமிழக மாவட்டங்களில் தர்மபுரி, கடலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், திருவண்ணாமலை போன்ற மாவட்டங்களில் தேர்தலின் வெற்றியைத் தீர்மானிக்கும் மிக முக்கிய காரணியாகப் பார்க்கப்படுகிறது. இதனால், வன்னீயர் வாக்கு சிறதக்கூடும் என்பதால் அன்புமணிக்கு குறைவாக தொகுதிகள் வழங்கப்பட்டு உள்ளது. பாமக கட்சி தனது தேர்தல் வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் 20க்கும் குறைவான தொகுதிகளில் போட்டியிடுவது இதுவே முதல் முறை என்று கூறப்படுகிறது. அதேபோல் அன்புமணி மாம்பழம் சின்னத்தில் போட்டியிட உள்ளார்.

இப்படியான நிலையில், ராமதாஸ் தரப்பு பாமகவும், தூரோகத்திற்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ள சசிகலாவும் கூட்டணி வைத்துள்ளது.மொத்தம் 234 தொகுதிகளிலும் வேட்பாளர்களை அறிவித்துள்ளனர். மற்ற கட்சிகளும் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுப்பட்டு வரும் நிலையில் அதற்கு டஃவ் கொடுக்கும் வகையில்,சசிகலா பிரச்சாரம் நடத்தி வருகிறார்.அதேபோல் சட்டமன்ற தேர்தலில் அன்புமணி போட்டியிடும் தொகுதிகளில் ராமதாஸ் தேர்வு செய்து நிர்வாகிகளை அறிவித்தார். 30 தொகுதிகளில் போட்டியிடுகிறது. அந்தக் கட்சிக்கு 'சிலிண்டர்' சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே கட்சியில் இருந்து நீக்கப்பட்ட அன்புமணி கட்சியின் பெயரையும், சின்னத்தை பயன்படுத்த கூடாது. அதற்கான உரிமை அவருக்கு இல்லை.கட்சியின் நிறுவனர் என்ற முறையில் மாம்பழம் சின்னத்தை தனக்கு ஒதுக்கவேண்டும்.அல்லது பாமக உட்கட்சி மோதல் பிரச்சனை முடிவுக்கு வரும் வரை சின்னத்தை முடக்கவேண்டும் என்று ராமதாஸ் சென்னை உரிமையில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இருந்தார்.

இந்த வழக்கு நேற்று நீதிபதி டி.வி தமிழ் செல்வி முன் விசாரணைக்கு வந்தது.அப்போது தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளது என்று கூறி, வழக்கை ஒத்திவைத்தார்.

**வரி விளம்பரங்கள்**

தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | | |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# தமிழகத்தில் வணிக ரீதியான எல்பிஜி ஒதுக்கீட்டை 70% அதிகரிக்க நடவடிக்கை: இந்திய எண்ணெய் கழகத் தலைவர் தகவல்



சென்னை: தமிழகத்தில் வணிக ரீதியான எல்பிஜி ஒதுக்கீடு உடனடியாக 70 சதவீதம் அதிகரிக் கப்பட்டுள்ளதாக இந்திய எண்ணெய் கழகத்தலை வர் ஏ.எஸ் . சஹானி தெரிவித்தார்

தமிழகத்தில் எரிபொருள் நிலைமை குறித்து, இந்திய எண்ணெய் கழகத் தலைவர் ஏ.எஸ் .சஹானி சென்னையில் நேற்று ஆய்வு செய்தார். பின்னர் நிருபர்களிடம் அவர் கூறியதாவது: சுத்திகரிப்பு திறன்கள் ஏறத்தாழ முழு அளவில் இருப்பதால் பெட்ரோல், டீசல், விமானத்துக்கான எரிபொருள் உட்பட திரவ எரிபொருள் விநியோகத்தில் சிக்கல் இல்லை.

நாள் தோறும் சுமார் 5 லட்சம் சிலிண்டர்கள் என்ற தமிழகத்தின் சமையல் எரிவாயு தேவையை 100 சதவீதம் பூர்த்தி செய்யும் நிலையில் எண்ணெய் சந்தைப் படுத்தும் நிறுவனங்கள் உள்ளன. வீட்டு உபயோக சமையல் எரிவாயுக்கு அதிக பட்ச முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

சில பகுதிகளில் 6 முதல் 8 நாட்கள் வரை காத்திருப்பு காலம் இருப்பதை குறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் போன்ற அத்தியாவசியப் பகுதிகளுக்கு எந்த விதமான கட்டுப்பாடும் இல்லாமல் 100 சதவீதத் தேவைப் பூர்த்தி செய்யப்படுகிறது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் 20 நாட்கள் வரை காலதாமதம் தொடர்பாக விரிவானப் பகுப் பாய்வு நடத்தப்பட்டுள்ளது. சனிக்கிழமைக்குள் இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும்.

பதுக்கல்மற்றும்முறைகேடு களை தடுக்க மாநில அரசு 10,000-க்கும் அதிகமான திடீர் ஆய்வுகளைமேற்கொண்டது.எண்ணெய் சந்தைப் படுத்தும் நிறுவனங்கள் முன்கூட்டியே அறிவிக்காமல் 1,500-க்கும் அதிகமான திடீர் சோதனைகளை தமிழகம் முழுவதும் மேற்கொண்டுள்ளது. மக்களின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்ய போதிய கச்சா எண்ணெய் இருப்பில் உள்ளதால், எரிபொருட்கள் வாங்குவது தொடர்பாக மக்கள் பீதியடைய வேண்டாம் . இவ்வாறு அவர் கூறினார்.

**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# "மீண்டும் திமுக ஆட்சிக்கு வந்தால் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இருக்காது" குஷ்பு பிரச்சாரம்



மதுரை: "இரண்டு பெண் குழந்தைகளுக்கு தாயாக உள்ள நான் சொல்கிறேன். தமிழகத்தில் மீண்டும் திமுக ஆட்சிக்கு வந்தால் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இருக்காது" என்று திருப்பரங்குன்றம் அதிமுக வேட்பாளர் விவி. ராஜன் செல்லப்பாவை ஆதரித்து பேசிய தமிழக பாஜக துணைத் தலைவர் குஷ்பு தெரிவித்தார்.

திருப்பரங்குன்றம் அதிமுக வேட்பாளர் வி.வி.ராஜன் செல்லப்பாவை ஆதரித்து, குஷ்பு திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சிந்தாமணி, மேல அனுப்பானடி உள்ளிட்ட பகுதிகளில் பிரச்சாரம் செய்தார். பொதுமக்கள், அதிமுகவினர், அதிமுக வேட்பாளர்ராஜன்செல்லப்பாவிற்கும், நடிகை குஷ்புவிற்கும் பூக்கள் தூவியும், ஆரத்தி எடுத்தும் உற்சாகமாக வரவேற்பு அளித்தனர்,

குஷ்பு பிரச்சாரத்தில் பேசியதாவது: கடந்த ஐந்து ஆண்டுகளாக மதுரைக்குஎந்தவேலைவாய்ப்பு, பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களைக் கொண்டு வராத திமுகவினர் எந்த முகத்தை வைத்து மக்களிடம் ஓட்டு கேட்டு வருகிறார்கள். எய்ம்ஸ், நீட் தேர்வு, பெண் குழந்தைகள் பாதுகாப்பு, போதைப்பொருள் நடமாட்டம் தடுப்பு என கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. பெண் குழந்தைகள் நிம்மதியாக வெளியே போய்விட்டு வீட்டுக்கு திருப்பி வர முடிகிறதா? ஐந்து நிமிடங்கள் தாமதமானால் பெற்றோர்கள் மனதில் திக் திக் என்று அடிக்கிறது. நானும் இரண்டு பெண் குழந்தைகளுக்கு தாயாக இருக்கிறேன். அதனாலேயே இதைச் சொல்கிறேன்.

அந்த அளவுக்கு தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு போய் உள்ளது.உலகில்மிகச்சிறந்த தலைவர் யார் என்று கேட்டால் மோடி என்கிறார்கள். கடைசி ஐந்தாவது இடத்தில் இருந்த இந்தியா உலக அரங்கில் முன்னனி பெற ஆரம்பித்துள்ளது.

மதுரையில் திமுகவினர் ஊழல் முறைகேட்டில் ஈடுபட்டு பதவிகளை இழந்துள்ளனர். போலீஸாரால் கைதும் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழக மக்களுக்கு பாதுகாப்பு வேண்டும் என்றால், நிம்மதி கிடைக்கவேண்டுமென்றால்,பெண் குழந்தைகள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றால் திமுக ஆட்சியை வீட்டிற்கு அனுப்ப வேண்டும். பாதுகாப்பை வழங்கி மக்கள் நிம்மதியாக வாழ அதிமுக ஆட்சிக்கு மீண்டும் வர வேண்டும்.

பஸ்ஸில் பெண்கள் இலவச பயணத்தை பார்த்துதிமுகஅமைச்சர், 'ஓசில தான் போறீங்க...' என கிண்டல் செய்கிறார்.

இன்னொரு அமைச்சர் பெண்களை இழிவாகப் பேசுகிறார். பெண்கள் என்றால் அவ்வளவு இழிவாகப்போச்சாஉங்களுக்கு. பெண்களைப் பார்க்க அவ்வளவு கேவலமாக உள்ளதா? பெண்கள் ஆசைப்பட்டது சம உரிமை. பெண்கள் ஆசைப்பட்டது சம மரியாதை. பழனிசாமி பெண்களுக்கு மட்டுமில்லை, ஆண்களுக்கும் இலவச பயணம் என்று கூறிவிட்டார். அதனால், இனி வீட்டில் ஆண்கள், பெண்கள் சேர்ந்து பஸ்சில் இலவசமாகபயணம் செய்யலாம். அதிமுகவுக்கு வாக்களித்தால் நிச்சயமாக மக்கள் வாழ்க்கை தரம் உயரம்.

இவ்வாறு அவர் பேசினார்.

# தொகுதி மறுவரையறை திட்டத்துக்கு இந்திய கம்யூனிஸ்ட் கண்டனம்



சென்னை: இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்ட அறிக்கை : இந்தியாவில் 5 மாநிலங்களில் சட்டப்பேரவை தேர்தல்கள் நடக்கின்றன. இதனால், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில்,தொகுதி மறுவரையறையை நாடாளுமன்றத்தில் அவசர, அவசரமாக கொண்டுவர மத்திய அரசு முயற்சிக்கிறது.

2021 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், தொகுதி மறுவரையறை செய்யப்பட்டால், வடமாநிலங்களின் தொகுதி எண்ணிக்கை இரட்டிப்பாகிவிடும்.

தென் மாநிலங்களின் தொகுதி எண்ணிக்கை 24 விழுக்காடாக தேங்கிவிடும். இத்தகைய முயற்சியை மத்திய அரசு உடனடியாகக்கைவிடவேண்டும்.

# கோவையில் வாக்குக்கு தங்க நாணயம்... செந்தில் பாலாஜி மீது நயினார் நாகேந்திரன் குற்றச்சாட்டு





சட்டப்பேரவை தேர்தல் நெருங்கி வரும் நிலையில் மீண்டும் ஆட்சியை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் திமுக களத்தில் இறங்கி வேலை பார்த்து வருகிறது. தொடர்ந்து இரண்டாவது முறையாக திமுக ஆட்சி அமைத்தசரித்தரமேஇல்லையென எதிர்கட்சிகள் தொடர்ந்து விமர்சனம் செய்து கொண்டிருக்கிறார்கள். இதனால் திமுக மீண்டும் ஆட்சியை அமைக்க வேண்டுமென தொண்டர்கள் பெரிதும் எதிர்பார்க்கின்றனர். மற்றொரு பக்கம் அதிமுக கூட்டணி இழந்த ஆட்சியை மீண்டும் பிடிக்க வேண்டுமென பல வியூகங்கள் வகுத்து வருகிறது.

இந்நிலையில் தற்போது தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டு வரும் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், திமுக இரண்டாவது முறையாக ஆட்சிஅமைத்தது இல்லை என்ற கருத்தை மீண்டும் முன்வைத்துள்ளார்.அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகித்துள்ள பாஜகவுக்கு 27 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து பாஜகசார்பாகபோட்டியிடும் வேட்பாளர்களை அறிவித்து பரப்புரையையும் துவங்கி விட்டனர்.

அந்த வகையில் சிவகங்கை திருப்பத்தூர் தொகுதியில் பரப்புரையில் ஈடுபட்ட நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கலைஞர் கருணாநிதி இருந்த சமயத்திலே திமுக இரண்டாவது முறையாக ஆட்சி அமைத்தது இல்லை. கோவையில் வாக்குக்கு தங்க நாணயம் வழங்கி வருகிறார்.

இதையெல்லாம் தாண்டி தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவான அலைவீசுகிறது என தெரிவித்துள்ளார் நயினார் நாகேந்திரன்.


முன்னதாக நேற்றைய தினம் தேர்தல் பரப்புரையில் பேசிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், கடந்த 2021 ஆம் ஆண்டு என்ன ஜாதகத்தில் முதல்வராகும் யோகம் கிடையாது. கட்டம் சரியில்லை என்று பேசினார்கள் உழைப்பை மட்டும் நம்பிய நான், எதிர்கட்சிகளின் கருத்தையெல்லாம் உடைத்து முதல்வர் ஆனேன். அதே மாதிரி தற்போது இரண்டாவது முறையாக திமுக ஆட்சி அமைத்தது கிடையாது என்று தொடர்ச்சியாக பேசி வருகிறார்கள்.

2021 ஆம் ஆண்டு எப்படி மூட நம்பிக்கையை உடைத்து ஆட்சி அமைத்தோமோ, அப்படி 2026 தேர்தலிலும் வெற்றி பெறுவோம். கடந்த முறையை விடவும் மிகப்பெரிய வெற்றியை பெற்று திமுக மறுபடியும் ஆட்சி அமைக்கும் என மிகுந்த நம்பிக்கையுடன் பேசியுள்ளார் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்.

தொடர்ந்து இரண்டாவது ஆட்சி அமைக்கும் வாய்ப்பு திமுகவுக்கு கிடைக்காது என்று எதிர்கட்சியினர் தொடர்ந்து பேசி வரும் நிலையில், அதனை உடைக்க வேண்டும் என்பதில் திமுக தலைவர்கள் உறுதியாக உள்ளனர். இதனிடையில்இந்தமுறை தேர்தலில் பல முனைகளில் போட்டி நிலவி வருவதும், அரசியல் களத்தில் பேசு பொருளாகியுள்ளது. திமுக, அதிமுக, நாதகவை தொடர்ந்து விஜய்யின் தமிழகவெற்றிக் கழகமும் இந்த முறை தேர்தலில் களமிறங்கியுள்ளது.அதே போல் ராமதாஸ் – சசிகலா கூட்டணி அமைத்து இந்த தேர்தலை எதிர்கொள்கின்றனர். மேலும் புதிய தமிழகம், வேல்முருகனின் தமிழக வாழ்வுரிமை கட்சியும்தனித்து போட்டியிடுகிறது.

இப்படி பல முனைகளில் இருந்து போட்டி நிலவி வருவது தமிழக அரசியல் களத்தை சுவாரஸ்யமாக்கியுள்ளது. இதனிடையில் அதிமுக கோட்டையான கோவை பகுதியில் திமுக சார்பாக செந்தில் பாலாஜி களமிறக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து அவர்மீது அண்ணாமலை உள்ளிட்ட எதிர்கட்சியினர் தொடர்ந்து பல விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். அந்த வகையில் தற்போது நயினார் நாகேந்திரன், கோவையில் வாக்குக்கு செந்தில் பாலாஜி தங்க நாணயம் வழங்குவதாக பேசியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் பறக்கும் படை அதிகாரிகளின் சோதனையில் 100 டம்மி வாக்குப்பதிவு இயந்திரங்கள் பறிமுதல்



சென்னை: சென்னையில் தேர்தல் பறக்கும் படை அதிகாரி களின் சோதனையில் 100 டம்மி வாக்குப்பதிவு இயந்திரங்கள் சிக்கின. ஒரத்தநாடு திமுக வேட்பாளர் வைத்திலிங்கம் படத்துடன் கூடிய விசிட்டிங் கார்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

சென்னை அண்ணா நகர் சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட அரும்பாக்கம் 100 அடி சாலையில் நேற்று முன் தினம்இரவுதேர்தல்பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அந்த வழியாகவந்தசரக்குஆட்டோ ஒன்றைமடக்கிசோதனை செய்தனர். அப்போது அதில் 100 டம்மி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (இவிஎம்) இருந்தது தெரியவந்தது.

மேலும் திமுக ஒரத்தநாடு சட்டப்பேரவை தொகுதி வேட்பாளர் வைத்தியலிங்கத்தின் புகைப்படங்கள் அடங்கிய விசிட்டிங் கார்டுகள் கொண்ட 5 பார்சல்கள் இருந்தன. இதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த தேர்தல் பறக்கும் படையினர் அனைத்தையும் பறிமுதல் செய்தனர்.

பின்னர் அவற்றை அண்ணாநகர் தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரி அலுவலகத்துக்குக் கொண்டு சென்றனர். விசாரணையில் பார்சல் கொண்டு சென்ற நபர் சேலத்தைச் சேர்ந்த செல்வம் என்பதும், ஆட்டோ ஓட்டி வந்தவர் அண்ணா நகரைச் சேர்ந்த கணேசன் என்பதும் தெரியவந்தது . பறிமுதல் செய்யப்பட்டடம்மி இவிஎம் இயந்திரங்களை தனியார் பேருந்து மூலம் ஒரத்தநாடு சட்டப் பேரவை தொகுதிக்கு அனுப்பி வைக்கதிட்டமிட்டு இருந்ததும், வாக்கு சேகரிப்பின்போது வைத்திலிங்கம் புகைப்படம் ஒட்டிய இந்த டம்மி மிஷினை காண்பித்து வாக்கு சேகரிக்க திட்டமிட்டு இருந்ததும் தெரியவந்தது.

இந்த விவகாரம் ஒரத்தநாடு சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்டது என்பதால் அந்த தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மகிளா காங்கிரஸ் தலைவர் பதவி நீக்கம்: செல்வப்பெருந்தகை மீது பரபரப்பு குற்றச்சாட்டு



சென்னை: மகிளா காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து ஹசீனா சையத்தை நீக்கி கட்சி மேலிடம் உத்தரவிட்டுள்ளது. சட்டப்பேரவைத் தேர்தலில் உரிய வாய்ப்பு வழங்கப்படவில்லை எனக் கூறி கருப்பு உடை அணிந்து, மகிளா காங்கிரஸார் சென்னை கோயம்பேட்டில் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது மகிளா காங்கிரஸ் தலைவர் ஹசீனா சையத் கூறியதாவது:மேற்குவங்கம், கேரளம், அசாமில் பெண்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, மகிளா காங்கிரஸ்மாநிலத்தலைவிகள் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது . தமிழகம், புதுச்சேரியில் மகிளா காங்கிரஸ் திட்டமிட்டு ஓரங்கட்டப் பட்டுள்ளது.கிருஷ்ணகிரி அல்லது மயிலாடுதுறை தொகுதியில் போட்டியிடுவதற்கான பணிகளையும் நான் மேற்கொண்டு வந்தேன். ஆனால், மகிளா காங்கிரஸ் நிர்வாகிகள் யாருக்கும் வாய்ப்பளிக்கவில்லை. மாணவர் பருவம் முதல் கடந்த 30 ஆண்டுகளாகக் கட்சிக்காக உழைத்து வருகிறேன். நாங்கள் வாய்மூடி இருப்பதாலேயே எங்களுக்கு மிகப்பெரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இதற்கு மாநிலத் தலைவர் செல்வப்பெருந்தகை பதில் சொல்லியே தீர வேண்டும். மேலூர் தொகுதி நான் இஸ்லாமியச் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதால்களா? கடந்த 5-ம் தேதி மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் எனக்குப் போன் செய்து, மேலூர் தொகுதி உனக்குத் தான் என்று கூறி ஆவணங்களைத் தயார் செய்யச் சொன்னார். ஆனால், கடைசி நேரத்தில் வேறு ஒருவரை அறிவித்துவிட்டார்கள். தேசியத் தலைவரும், மாநிலத் தலைவரும் இணைந்து எங்களுக்குத் துரோகம் செய்துள்ளார்கள். நாங்கள் ஏற்கெனவே ராஜினாமா கடிதத்தை அனுப்பி விட்டுதான் இங்கு வந்துள்ளோம். நான் கட்சியை விட்டுச் செல்லவும் தயாராக உள்ளேன்.

# பாஜகவிடம் ரூ.200 கோடி பெற்றதாக புகார்: ஹுமாயூன் கபீருடன் கூட்டணியை முறித்தார் ஒவைசி





புதுடெல்லி: மேற்கு வங்கத்தில் அயோத்தி பாபர் மசூதியை போன்று புதிய மசூதிக்கு அடிக்கல் நாட்டியதை தொடர்ந்து திரிணமூல் காங்கிரஸ் கட்சியில் இருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டவர் ஹுமாயூன் கபீர்.

முர்ஷிதாபாத்மாவட்டம், பரத்பூர் எம்எல்ஏ வான இவர், ஆம் ஜனதா உன்னயன் கட்சி (ஏஜேயுபி) என்ற புதியகட்சியைதொடங்கினார். மேற்கு வங்க தேர்தலையொட்டி இக்கட்சியுடன் ஏஐஎம்ஐஎம் கட்சித் தலைவர் அசாதுதீன் ஒவைசி கூட்டணி வைத்தார். இந்நிலையில் சமூக வலைதளங்களில் வைரலாகும் ஒரு 'ஸ்டிங் ஆபரேஷன்' தேர்தல்அரசியலில்பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

இது தொடர்பாக திரிணமூல் காங்கிரஸ் வெளியிட்டுள்ள ஒரு ரகசிய பதிவில், மேற்கு வங்கத்தில் முஸ்லிம் வாக்குகளை திசை திருப்ப பாஜகவிடம் ஹுமாயூன் கபீர் ரூ.1,000 கோடி பேரம் பேசி,ரூ.200கோடி முன் பணம் பெறுவது போன்ற காட்சிகள் தெரிகிறது.இதையடுத்து, ஹுமாயூன் கபீருடன் தனது கூட்டணியை முறித்துக் கொள்வதாக ஒவைசி அறிவித்துள்ளார். இது குறித்து அவரது ஏஐஎம்ஐஎம் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஹுமாயூன் கபீர் தொடர்பான ரகசியப் பதிவின் தகவல்கள் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளன.

இது, மேற்கு வங்க முஸ்லிம்களை அரசியல் ரீதியாகப் பாதிப்புக்குள்ளாக்குவதை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. முஸ்லிம் சமூகத்தின் கண்ணியம் மற்றும் நலன்களை கேள்விக்குள்ளாக்கும் எந்தவொரு கருத்துடனோ அல்லது நடவடிக்கையுடனோ எங்களால் இணைத்துக்கொள்ள இயலாது. எனவே மேற்கு வங்க தேர்தலில் தனித்து போட்டியிடுவோம்" என்று குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில் தன் மீதானபுகாரைஹுமாயூன் கபீர் மறுத்துள்ளார் . இதுகுறித்து அவர் கூறுகையில், "இந்த ஸ்டிங் வீடியோ போலியானது. செயற்கைநுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்டது. எனக்கு எதிராக திரிணமூல் கட்சியினர் தீட்டிய அரசியல் சதி இது. நான் எந்தக் கட்சியிடமிருந்தும் பணம் எதையும் பெற்றுக் கொள்ளவில்லை" என மறுத்துள்ளார்.

இது குறித்து மாநில அமைச்சர் பிர்ஹாத் ஹக்கீம் கூறுகையில், "கபீர் முஸ்லிம்களை பாஜக- விடம் விற்றுவிட்டார். மால்டா, முர்ஷிதாபாத் போன்ற மாவட்டங்களில் முஸ்லிம் வாக்காளர்களை பிளவுபடுத்த பாஜக முயற்சிக்கிறது. இந்து, முஸ்லிம் மற்றும் மத்துவா சமூகங்களை திசை திருப்பும் நோக்கில், பி, சி என 2 அணிகளை பாஜக உருவாக்கியுள்ளது. அந்த வீடியோவில் பிரதமர் அலுவலகத்தின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், இதில் தொடர்புடைய அதிகாரிகள் மீது ஏன் விசாரணை நடத்தப்படவில்லை. அமலாக்கத்துறை இவ்விஷயத்தில் மவுனம் சாதிப்பது ஏன்?" என கேள்வி எழுப்பி உள்ளார்.

# "இலவசங்களை அறிவிக்கும் கட்சிகள் அதற்கான நிதி குறித்து விளக்க வேண்டும்" வெங்கய்ய நாயுடு பேச்சு



சென்னை: இலவசங்களை அறிவிப்பவர்கள் அதற்கான நிதி குறித்து மக்களுக்கு விளக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள வெங்கய்ய நாயுடு, மக்களும் இது குறித்து கேள்வி எழுப்பவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற குடியரசு முன்னாள் துணைத் தலைவர் வெங்கய்ய நாயுடு, பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர், "ஒரு மனிதனுக்கு மீனை கொடுப்பதைவிட மீன் பிடிக்க கற்றக்கொடுக்க வேண்டும் என்ற ஒரு பழமொழி உண்டு. தொடர்ந்து இலவசங்களை கொடுத்துக்கொண்டே இருந்தால் மக்கள் மேலும் பலவற்றை எதிர்பார்க்கத் தொடங்குவார்கள். இதைத்தான் நான் நிகழ்ச்சியில் பேசும்போதும் தெரிவித்தேன். நான் எந்த ஒரு மாநிலத்தையும் குறிப்பிடவில்லை. இது நாடு முழுவதுமே நடக்கிறது.

இதை கருத்தில் கொண்டு ஒவ்வொரு அரசும் மக்களின் கல்வி மற்றும் சுகாதாரத்தில் கூடுதல்கவனம்செலுத்த வேண்டும். அரசால் வழங்க முடியும் என்றால் இலவசங்களைக் கொடுக்கலாம். அதேநேரத்தில், இலவசங்கள் குறித்த வாக்குறுதிகளை அளிப்பது அது எந்த கட்சியாக இருந்தாலும், எந்த மாநிலமாக இருந்தாலும், எந்த அரசாங்கமாக இருந்தாலும் அவர்கள், அதற்கான நிதி ஒதுக்கீடு குறித்த திட்டத்துடன் வாக்குறுதிகளை அளிக்கவேண்டும். நிதிநிலை அறிக்கை இல்லாமல், மாநிலத்தின் நிதி நிலைமை குறித்த புரிதல் இல்லாமல் இன்னும் இன்னும் இலவசங்கள் அறிவிக்கப்படுமானால் மக்கள் கேள்வி எழுப்ப வேண்டும். அது எந்தக் கட்சியாக இருந்தாலும் அதனிடம் கேள்வி கேட்க வேண்டும்.

இலவசங்கள் அறிவிக்கிறீர்களே, அதற்கான நிதிக்கு என்ன செய்யப் போகிறீர்கள்? எவ்வாறு பட்ஜெட்டை திட்டமிடப் போகிறீர்கள்? எவ்வாறு நிதி திரட்டப் போகிறீர்கள்? என்ற கேள்விகளை மக்கள் கேட்க வேண்டும். இந்த விஷயத்தை நான் மிகவும் வலியுறுத்த விரும்புகிறேன்" என தெரிவித்தார்.

பெண்களுக்கான இட ஒதுக்கீடு தொடர்பாக சிறப்பு நாடாளுமன்ற அமர்வு கூட இருப்பது குறித்த கேள்விக்கு பதில் அளித்த வெங்கைய்யா நாயுடு, "பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்றுவதற்காக நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நீட்டிக்கப்பட்டிருப்பதை நான் உறுதியாக வரவேற்கிறேன். ஏனெனில் இது நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்த ஒரு திட்டம். மக்கள் தொகையில் பெண்கள் 50 சதவீதத்தை வகிக்கின்றனர். அவர்கள் சமூகத்தின் ஒருங்கிணைந்த அங்கமாகத் திகழ்வதோடு, நாட்டின் வளர்ச்சிக்கும் பங்களிக்க வேண்டியவர்கள் என்பதால், அவர்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்குவதில் எவ்விதச் சிக்கலும் இருக்கக்கூடாது.

இது ஒன்றும் புதிய சிந்தனை அல்ல; இது குறித்து முன்னரே விவாதிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் நிறைவேற்றப்பட்டும் உள்ளது. எனவே, தற்போது இம்சோதா முழுமையாக நிறைவேற்றப்படுவதை உறுதிசெய்ய, அவையின் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய தருணம் இது" என தெரிவித்தார்.



# சட்டமன்ற தேர்தலில் விஜய்யின் தாக்கம் நிச்சயம் இருக்கும் ஏ.சி.சண்முகம் பேட்டி

தஞ்சாவூர்: வரும் சட்டப் பேரவை தேர்தலில் விஜய் நிச்சயமாக தக்கத்தை ஏற்படுத்துவார் என புதிய நீதிக் கட்சித் தலைவர் ஏ.சி.சண்முகம் தெரிவித்தார்.

தமிழக சட்டப் பேரவை தேர்தல் களம் விறுவிறுப்படைந்த சூழலில், அரசியல் கட்சி தலைவர்களும், வேட்பாளர்களும் தீவிர பிரச்சாரத்தில் இறங்கியுள்ளனர். அதே போல, போட்டியிடும் வேட்பாளர்களுக்கு கூட்டணிக் கட்சி தலைவர்கள் ஆதரவு திரட்டி வருகின்றனர்.

அந்த வகையில், தஞ்சை சட்டமன்றத் தொகுதியில் தே.ஜ. கூட்டணி சார்பில் போட்டியிடும் பாஜக வேட்பாளர் கருப்பு முருகானந்தத்திற்கு ஆதரவாக புதிய நீதிக் கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம் வாக்கு சேகரித்தார்.

அப்போது செய்தியாளர்களை சந்தித்த ஏ.சி.சண்முகத்திடம் தவெக தலைவர் விஜய்யின் அரசியல் குறித்த கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் நடிகரும், தவெக தலைவருமான விஜய் நிச்சயமாக தாக்கத்தை ஏற்படுத்துவார். தவெகவினர் தொகுதிக்கு 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரை வாக்குகளை நிச்சயமாக வாங்குவார்கள்.

அதே சமயம் வலுவான வேட்பாளர்களாக இருந்தால், இரண்டாம் இடத்திற்கு கூட வருவார்கள். இன்னும் சிறப்பான வேட்பாளர்களாக இருந்தால், கொஞ்சம் தொகுதியை அவர்கள் பிடிப்பார்கள். இது மறுக்க முடியாத உண்மை. திமுக வாங்கும் வாக்குகளை அவர்கள் பிரிப்பார்கள். மேலும், மற்ற கட்சிசாரா இளைஞர்களின் வாக்கும் அவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்புள்ளது" என்றார். மேலும் பேசிய அவர், "தஞ்சாவூரில் தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றால் தஞ்சை தொகுதி நிச்சயமாக முன்னேற்ற மடையும். 'ஒரே நாடு ஒரே தேர்தல்' என்பது வரவேற்கத்தக்க ஒன்று. ஏனென்றால், மத்தியிலும், மாநிலத்திலும் தனித்தனியே தேர்தலை நடத்துவது வீண் விரயம், வீண் செலவு தான்.

'ஒரே நாடு ஒரே தேர்தல்'-அதேபோல அதிலே மூன்றிலே ஒரு பங்கு பெண்களுக்குக் கொடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் இருக்கின்ற இடங்கள் குறையாது என்று பிரதமர் மோடி அறிவித்திருக்கிறார். ஆகவே, மாநிலத்தில் இருக்கின்ற தொகுதிகள் அதிகமாக்கப்படுமே தவிர, மூன்றிலே ஒன்று கூடுதலாக (Additional) கொடுக்கப் போகிறார்கள். எனவே, இதிலே எந்தவிதமான பாதிப்பும் நமக்கு இல்லை. ஆகவே இதை வரவேற்கலாம்" என அவர் கூறினார்.

இந்தசந்திப்பின்போது, பாஜக வேட்பாளர் கருப்பு முருகானந்தம், புதிய நீதிக் கட்சி தென்மண்டல பொதுச் செயலாளர் ஸ்ரீபதி செந்தில்குமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# உள்துறை செயலாளர் தீரஜ் குமார் 'திடீர்' மாற்றம் தேர்தல் ஆணையம் அதிரடி உத்தரவு




சென்னை: தமிழ்நாடு அரசின் உள்துறைச் செயலாளர் தீரஜ் குமாரை பணியிட மாற்றம் செய்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. புதிய உள்துறை செயலாளராக மணிவாசன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் வரும் 23-ம் தேதி நடைபெற உள்ளது. தொடர்ந்து, மே 4 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடத்தப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன. தேர்தலையொட்டி, தமிழ்நாட்டில் பரப்புரை அனல் பறக்கிறது.

தேர்தலை நேர்மையாகவும், பாரபட்சமின்றியும் நடத்துவதற்காக தொடர்ச்சியாக ஒரே இடத்தில் பணியாற்றி வரும் அரசு அதிகாரிகளை மாற்றுவது நடைமுறையில் இருக்கிறது.

தமிழகத்தில் உள்ள எதிர்க்கட்சிகளும் தேர்தல் ஆணையரை சந்தித்து ஆளும் அரசுக்கு ஆதரவாக செயல்படுவதாகக் கூறி சில ஐஏஎஸ் அதிகாரிகளையும், காவல் துறை அதிகாரிகளையும் மாற்றம் செய்ய வேண்டும் என கோரிக்கைவிடுத்து வந்தனர். இதனையடுத்து, பல்வேறு நிலைகளில் பணியாற்றும் காவல் துறைஅதிகாரிகள் மாற்றப்பட்டு வந்த நிலையில் அண்மையில் தமிழ்நாடு பொறுப்பு டிஜிபி வெங்கட்ராமனையும் இடமாற்றம் செய்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது. மேலும் சட்டம் ஒழுங்கு புதிய டிஜிபி-யாக சந்தீப் ராய் ரத்தோர் நியமிக்கப்பட்டார்.

மேலும், லஞ்ச ஒழிப்புத் துறை டிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம் அந்த பதவியில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டு அவருக்கு பதிலாக சந்தீப் மிட்டல் நியமிக்கப்பட்டார்.

தொடர்ந்து தலைமைச் செயலாளர் முருகானந்தமும் இடமாற்றம் செய்யப்பட்டு அவருக்கு பதில், தமிழ்நாடு அரசின் புதிய தலைமைச் செயலாளராக சாய் குமார் நியமிக்கப்பட்டார். பெருநகர சென்னை காவல் ஆணையர் அருண் நேற்று பணியிட மாற்றம் செய்யப்பட்டு, சென்னை மாநகரின் புதிய காவல் ஆணையராக அபின் தினேஷ் மோதக் நியமிக்கப்பட்டார்.

இந்தநிலையில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் முன்னேற்பாடுகளை ஆய்வு செய்த தேர்தல் ஆணையம், உள்துறை செயலாளர் தீரஜ் குமாரை பணியிட மாற்றம் செய்து உத்தரவிட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் புதிய உள்துறை செயலாளராக மணிவாசனை நியமித்தும் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவு உடனடியாக அமலுக்கு வருவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. மேலும், புதிய உள்துறை செயலாளராக நியமிக்கப்பட்ட மணிவாசன் இன்று மாலை 5 மணிக்குள் பொறுப்பேற்க வேண்டும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. மேலும், இடமாற்றம் செய்யப்பட்ட அதிகாரியை வாக்குப்பதிவு நிறைவு பெறும் வரை தேர்தல் தொடர்பான வேறு எந்த பதவியிலும் நியமிக்க கூடாது என்றும் உத்தரவில் தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

# சென்னையில் ரூ.28.50 கோடி மதிப்பிலான தங்கம், வெள்ளி நகைகள் பறிமுதல்



சென்னை: உரிய ஆவணம் இல்லாமல் கொண்டு வரப்பட்ட ரூ. 28.50 கோடி மதிப்புள்ள தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்களை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்திருக்கின்றனர்.

தமிழக சட்டமன்ற தேர்தல் வருகிற ஏப்ரல் மாதம் 23 ஆம் தேதி நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கை மே 4 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இதனிடையே, தற்போது தமிழகத்தில் தேர்தல் நடத்தைவிதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளன. ஆகையால், வாக்காளர்களுக்கு பணப்பட்டுவாடாவை தடுப்பதற்காக தேர்தல் ஆணையத்தால் அமைக்கப்பட்ட பறக்கும் படையினர் மாநிலம் முழுவதும் பல்வேறு இடங்களில் வாகன சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சென்னை ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் நேற்று (ஏப்ரல் 10) இரவு தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, தி.நகர் நரசிம்மன் சாலை வழியாக வந்த தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான வாகனத்தை அவர்கள் தடுத்து நிறுத்தி சோதனை மேற்கொண்டனர். வாகனத்தில் சுமார் ரூ. 28.50 கோடி மதிப்புள்ள தங்கம் மற்றும் வெள்ளி பொருட்கள் கொண்டு வரப்பட்டது கண்டுபிடி க்கப்பட்டது. இவற்றுக்கான ஆவணங்களை அந்த வாகனத்தில் வந்தவர்களிடம் அதிகாரிகள் கேட்டபோது, அது இல்லாததும் தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து, உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்காத காரணத்தால் ரூ. 28.50 கோடி மதிப்புள்ள தங்கம் மற்றும் வெள்ளி பொருட்களை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர். மேலும், வாகனத்தில் வந்திருந்த தனியார் நிறுவனத்தின் மேலாளரிடம் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் தீவிர விசாரணையில் ஈடுபட்டனர்.

அதில், சென்னையில் உள்ள பிரபல நகைக்கடை உரிமையாளர், மும்பையில் இருந்து நகைகளை ஆர்டர் செய்து விமானம் மூலம் கொண்டு வந்தது தெரிய வந்தது. இதனை அடுத்து, தேர்தல் பறக்கும் படையினர் நகைகளுக்கு உரிய ஆவணங்கள் இல்லாததால் அதனை நுங்கம்பாக்கத்தில் உள்ள வருமான வரித்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். தொடர்ந்து, இதுகுறித்து வருமான வரித்துறை அதிகாரிகள் அடுத்தக்கட்ட விசாரணையில் களமிறங்கியிருக்கின்றனர்.

இது ஒருபுறம் இருக்க, தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ள காலங்களில் நகைகளைக் கொண்டு செல்ல உரிய வழிகாட்டுதல்களை வகுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட கோரி பிரபல தங்க நகை ஜூவல்லரி சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் கோரிக்கை முன் வைக்கப்பட்டது

. ஆனால், பறிமுதல் செய்யப்படும் நகைகள் மற்றும் பணம் உள்ளிட்டவை உரிய ஆதாரங்கள் சமர்ப்பித்தால் ஒரே நாளில் திருப்பி வழங்கப்படுவதாகக் கூறி, இதுகுறித்து எந்த விதிகளையும் வகுக்க உத்தரவிட முடியாது என நீதிமன்றம் திட்டவட்டமாக கூறிவிட்டது.

# கொலை வழக்கில் 17 வயது சிறுவனுக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனை தீர்ப்பு ரத்து



சென்னை: கொலை வழக்கில் 17 வயது சிறுவனுக்கு ஆயுள் தண்டனை விதித்து அமர்வு நீதிமன்றம் அளித்த தீர்ப்பை சென்னை உயர் நீதிமன்றம் ரத்து செய்துள்ளது. மேலும், வழக்கை சிறார் நீதிமன்றத்துக்கு மாற்றி உத்தரவிட்டுள்ளது.

மயிலாடுதுறையில் கடந்த 2022 ஆம் ஆண்டு வன்னியர் சங்க நகரத் தலைவர் கண்ணன் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட 17 வயதான இளஞ்சிறார் மீதான வழக்கை, சிறார் நீதிமன்றத்தில் விசாரிப்பதற்கு பதில், நாகப்பட்டினம் அமர்வு நீதிமன்றத்தில் குற்றம்சாட்டப்பட்ட மற்றவர்களுடன் விசாரிக்கப்பட்டு, தண்டனை விதிக்கப்பட்டது.

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட சிறுவனை, சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்கும்படி நாகப்பட்டினம் நீதிமன்றம் உத்தரவிட்ட போதும், சிறுவர் சீர்திருத்த பள்ளி இல்லாததால், அவர் கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.


வழக்கை நாகப்பட்டினம் அமர்வு நீதிமன்றத்தில் விசாரித்தது தவறு எனவும், சாதாரண சிறையில் அடைத்தது தவறு எனவும் கூறி, சிறுவன் சட்ட விரோத காவலில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் அவரை விடுவிக்கக் கோரி, அவரது தாய் சவிதா சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு வழக்கை தாக்கல் செய்திருந்தார். விசாரித்த நீதிபதிகள் அனிதா சுமந்த் மற்றும் சுந்தர் மோகன் அடங்கிய அமர்வு, சம்பவம் நடந்த போது 18 வயது பூர்த்தி யாகாத சிறுவன் மீதான வழக்கை, குற்றம் சாட்டப்பட்ட மற்றவர்களுக்கு எதிரான வழக்குடன் இணைத்து விசாரித்தது சிறார் நீதி சட்டப்படி தவறு என்றும், தண்டனை விதிக்கப்பட்ட பின் சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்காமல் சாதாரண சிறையில் அடைத்ததும் சட்டப்படி தவறு எனறும் கூறி, அவரை குற்றவாளி என அறிவித்து, தண்டனை விதித்த தீர்ப்பை ரத்து செய்து தீர்ப்பளித்தது.

மேலும், சிறார் மீதான வழக்கை, மயிலாடுதுறை சிறார் நீதிமன்றத்துக்கு மாற்றி உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கைமீண்டும் விசாரித்து 6 மாதங்களில் முடிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளது. சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்காமல், கடந்த 2023 ஆம் ஆண்டு ஜுன் முதல் கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த இளஞ்சிறாருக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கிய நீதிபதிகள், சட்ட விரோதமாக கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவருக்கு ஒரு லட்சம் ரூபாயை இழப்பீடாக வழங்கவும் உத்தரவிட்டனர்.

# விமானங்களில் கடத்தி வரப்பட்ட கொடிய விஷப் பாம்புகள் உட்பட 49 உயிரினங்கள் பறிமுதல்







சென்னை: மலேசியா மற்றும் தாய்லாந்தில் இருந்து விமானங்களில் சென்னைக்கு கடத்தி வரப்பட்ட கொடிய விஷப் பாம்புகள் உட்பட 49 அரிய உயிரினங்களை சுங்கத் துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் இருந்து ஏர் ஏசியா பயணிகள் விமானம் நேற்று நள்ளிரவு சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு வந்தது. அந்த விமானத்தில் வந்த பயணிகள் அனைவரையும் சுங்கத் துறை அதிகாரிகள் தீவிரமாக கண்காணித்து சோதனை மேற்கொண்டனர்.

அப்போது அந்த விமானத்தில் வந்த பயணி ஒருவர் மீது சந்தேகம் அடைந்த சுங்கத்துறை அதிகாரிகள், அவரை நிறுத்தி விசாரணை செய்தனர். அவர் முன்னுக்குப் பின் முரணாக பதில் அளித்த நிலையில், அவரது பாஸ்போர்ட்டை ஆய்வு செய்த போது சுற்றுலா விசாவில் மலேசியா சென்று சென்னை வந்து இருப்பது தெரிய வந்தது. இதனையடுத்து அந்த பயணி கொண்டு வந்த மிகப் பெரிய சூட்கேஸ் மற்றும் கூடைகளை சுங்கத்துறை அதிகாரிகள்பிரித்துப்பார்த்து சோதனை செய்தனர்.

அதில் கொடிய விஷம் கொண்ட நாகப் பாம்புகள், ராஜ நாகங்கள் உள்ளிட்ட 34அரியவகை பாம்புகள் மற்றும் உயிரினங்கள் இருந்துள்ளன. இதனையடுத்து அந்த அரிய வகை உயிரினங்களை பறிமுதல் செய்த சுங்கத்துறைஅதிகாரிகள் அதனை கடத்தி வந்த பயணியையும் கைது செய்தனர்.

அதே போல் தாய்லாந்து நாட்டிலிருந்து தாய் ஏர்வேஸ் பயணிகள் விமானம் நேற்று நள்ளிரவு சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு வந்தது. அதில் வந்த பயணிகள் அனைவரும் சோதனைகளையும் முடித்துக் கொண்டு வெளியேறிய நிலையில், ஒரு உடமை மட்டும் வெகு நேரமாக கேட்பாராற்று கிடந்தது. இதனால் சந்தேகம் அடைந்த சுங்கத் துறை அதிகாரிகள் அந்த சூட்கேஸை திறந்து சோதனை செய்தனர். அதில் மஞ்சள் நிற அபூர்வ குரங்கு, வெள்ளி நிற அபூர்வ குரங்கு, இந்திய பனை அணில், விஷம் சிலந்திப் பூச்சிகள் என்று 15 அபூர்வ உயிரினங்கள் இருந்தன. அந்த உயிரினங்களை கடத்திக் கொண்டு வந்த பயணி சுங்கத் துறை அதிகாரிகளின் சோதனைகளுக்கு பயந்து,அரிய வகை உயிரினங்களை கடத்தி வந்த சூட்கேசை கன்வேயர் பெல்ட்டில் வைத்து விட்டு சென்று இருப்பது தெரிய வந்தது.

தொடர்ந்து அந்த சூட்கேஸை கொண்டு வந்த பயணி குறித்து விமான நிலையத்தில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை கைப்பற்றி சுங்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். இதனையடுத்து சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்த சுமார் 49 அரிய வகை கொடிய விஷம் உடைய உயிரினங்கள் அனைத்தையும் மலேசியா மற்றும் தாய்லாந்து நாட்டிற்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை மேற்கொண்டனர்.

இதனையடுத்து மலேசியாவில் இருந்து கடத்தி வந்த அரிய வகை பாம்புகளை திருப்பி அனுப்புவதற்கான பணத்தை அதை கடத்தி வந்த பயணியிடம் இருந்து சுங்கத்துறை அதிகாரிகள் வசூல்செய்தனர்.மேலும் இந்த சம்பவம் குறித்து சுங்கத்துறை அதிகாரிகள் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நடிகர் ரஜினி, தனுஷ் வீட்டிற்கு வெடிகுண்டு மிரட்டல்: போயஸ் கார்டனில் பலத்த பாதுகாப்பு



சென்னை: சென்னை டிஜிபி அலுவலககட்டுப்பாட்டு அறைக்கு இன்று சனிக்கிழமை வெடிகுண்டு மிரட்டல் மின்னஞ்சல் ஒன்று வந்தது. அதில் போயஸ் கார்டன் பகுதியில் உள்ள நடிகர்கள் ரஜினிகாந்த் மற்றும் தனுஷ் ஆகியோரின் வீடுகளில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த மிரட்டலைத் தொடர்ந்து, தேனாம்பேட்டை போலீசார் மற்றும்வெடிகுண்டு கண்டறியும் நிபுணர்கள் போயஸ் கார்டன் பகுதிக்கு விரைந்தனர்

மோப்ப நாய்கள் உதவியுடன் இரு நடிகர்களின் இல்லங்களிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தீவிரச் சோதனையில் ஈடுபட்டனர். முன்னதாக, கடந்த சில மாதங்களுக்கு முன்பு இது போன்ற போலி மிரட்டல்கள் விடுக்கப்பட்ட நிலையில், தற்போது மீண்டும் மின்னஞ்சல் மூலம் மிரட்டல் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. தற்போது வரை சந்தேகத்திற்குரிய பொருட்கள் ஏதும் கண்டறியப்படவில்லை என்றாலும், பாதுகாப்பு கருதி போயஸ் கார்டன் பகுதியில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இந்த மின்னஞ்சலை அனுப்பிய நபர் யார்? என்பது குறித்து போலீசார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர். இது குறித்து போலீஸ் தரப்பில், மின்னஞ்சல் வந்த முகவரியை வைத்து மர்ம நபரை தேடி வருகிறோம், இது வெறும் வதந்தியா அல்லது சதியா என்பது விரைவில் தெரியவரும் என்று கூறப்பட்டது.ஒரேநேரத்தில் இரு முன்னணி நடிகர்களின் வீடுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதால், ரசிகர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மீன்பிடி தடைக்காலம்: மயிலாடுதுறை மாவட்ட மீனவர்கள் ஏப்.14க்குள் கரை திரும்ப மாவட்ட ஆட்சியர் உத்தரவு



மயிலாடுதுறை: மீன்பிடி தடை காலத்தை முன்னிட்டு ஆழ்கடலுக்கு மீன்பிடிக்க சென்ற மயிலாடுதுறை மாவட்ட மீனவர்கள் வரும் 14ஆம் தேதிக்குள் கரைக்கு திரும்ப வேண்டும்என ஆட்சியர் ஸ்ரீகாந்த் அறிவுறுத்தியுள்ளார். மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஸ்ரீகாந்த் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்; மீன் இனப்பெருக்க காலம்,மீன்வளத்தைப் பாதுகாத்திடும் பொருட்டும் தமிழ்நாட்டில் ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரை, 61 நாட்களுக்கு விசைப்படகுகள் மற்றும் இழுவைப் படகுகள் மூலம் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. தடைக்காலம் அமலுக்குவரும்முன்னர் கடலுக்கு சென்ற விசைப்படகுகள்,ஆழ்கடல் பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள படகுகள் அனைத்தும் வரும்ஏப்ரல் 14ம் தேதி நள்ளிரவு 12 மணிக்குள்கட்டாயம்கரைக்கு திரும்பிட வேண்டும் என்று ஆட்சியர் ஸ்ரீகாந்த் அறிவுறுத்தியுள்ளார்.இதுதொடர்பாக ஆழ்கடல் பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள படகுகளுக்கு வி.ஹெச்.எப், சாட்டிலைட் போன் மற்றும் பிற தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் தகவலை தெரிவித்து, உடனடியாக கரைக்கு திரும்பிட முன்கூட்டியே அறிவுறுத்தவேண்டும்என்று அனைத்து படகு உரிமையாளர்களைகேட்டுக்கொண்டுள்ளார்.

# புதுச்சேரி தேர்தலில் பாஜக வேட்பாளருக்கு கள்ள ஓட்டு போட்ட இளைஞர் கைது!



புதுச்சேரி: புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள 30 சட்டமன்றத் தொகுதிகளுக்கான தேர்தல் அன்மையில் நடைபெற்றது. கடந்த ஏப்ரல் 9-ம் தேதி நடைபெற்ற விறுவிறுப்பான வாக்குப்பதிவில், இதுவரை இல்லாத அளவாக 91.23% வாக்குகள் பதிவாகின. இது இந்திய தேர்தல் வரலாற்றில் ஒரு புதிய சாதனையாக பார்க்கப்படுகிறது.

இந்தத் தேர்தலில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நட்சத்திரத் தொகுதியாக மண்ணாடிப்பட்டு தொகுதி கருதப்பட்டது.இங்குபாரதிய ஜனதாகட்சியின்சார்பில் மாநில உள்துறை அமைச்சரான நமச்சிவாயம் களம் கண்டார். இதனால்இந்தத்தொகுதி பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. வாக்குப்பதிவு நேரத்தில் காங்கிரஸ்-திமுக கூட்டணி சார்பில் போட்டியிட்ட முன்னாள் துணை சபாநாயகர் செல்வம் மற்றும் பாஜக வேட்பாளர் நமச்சிவாயம் ஆகியோரின் ஆதரவாளர்கள் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இது ஒரு கட்டத்தில் கைகலப்பாக மாறி, இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் கடுமையாகத் தாக்கிக் கொண்டனர். நிலைமை மோசமடைந்ததை தொடர்ந்து போலீசார் தடியடி நடத்தி கூட்டத்தைக் கலைத்தனர்.

வாக்குப்பதிவு முடியும் தருவாயில் இளைஞர்கள் சிலர் கள்ள ஓட்டுப் போடுவதாகப் புகார் எழுந்தது. இதைக் கண்டித்து காங்கிரஸ் வேட்பாளர் செல்வத்தின் ஆதரவாளர்கள் வாக்குச்சாவடி மற்றும்காவல் நிலையத்தை முற்றுகையிட்டு அதிரடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புகாரை அடுத்து,கள்ள ஓட்டுப் போட்டதாகச் சந்தேகிக்கப்பட்டவிழுப்புரத்தைச் சேர்ந்த பிரசாத் என்ற வாலிபரை போலீசார் பிடித்து தீவிர விசாரணை நடத்தினர். அந்த விசாரணையில், மண்ணாடிப்பட்டு தொகுதியைச் சேர்ந்த மணிகண்டன் என்பவர் தற்போது வெளிநாட்டில் வசிப்பதும், அவரது வாக்கை பிரசாத் சட்டவிரோதமாகச்செலுத்தியதும் உறுதி செய்யப்பட்டது.

சுமார் இரண்டு நாட்கள் தொடர் விசாரணைக்குப் பிறகு, கள்ள ஓட்டுப் பதிவு செய்த குற்றத்திற்காக விழுப்புரம் வாலிபர் பிரசாத்தை போலீசார் இன்று முறைப்படி கைது செய்தனர். மாநிலத்தின் உள்துறை அமைச்சரே போட்டியிட்ட தொகுதியில், ஒரு வெளிமாநில வாலிபர் கள்ள ஓட்டுப் போட்டு கைதாகியுள்ள சம்பவம் புதுச்சேரி அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

# ஹோர்முஸ் நீரிணையை முழுவதும் திறக்க முடியாமல் சிக்கலில் தவிக்கும் ஈரான்



ஈரான் - இஸ்ரேல் - அமெரிக்கா போர் 2 வாரங்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் தலைநகரான இஸ்லாமாபாத்தில் அமைதி பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டு உள்ளது. இந்த நிலையில் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஹோர்முஸ் நீரிணையை கச்சா எண்ணெய் போக்குவரத்திற்காக பயன்படுத்தி வரும் பல்வேறு உலக நாடுகள் அந்த வழித்தடத்தை முழுமையாக திறக்க வலியுறுத்தி வருகின்றன.

ஆனால் ஈரான் தனக்கு தானே ஏற்படுத்தி கொண்டுள்ள ஒரு பிரச்சனையால் கப்பல் போக்குவரத்திற்காக ஹோர்முஸ் ஜலசந்தியை முழுமையாக மீண்டும் திறக்க முடியாத சூழலில் அந்நாடு உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. உலகின் எண்ணெய் விநியோகத்தில் சுமார் ஐந்தில் ஒரு பங்கை கொண்டு செல்ல பயன்படும் ஹோர்முஸ் வழித்தடத்தை மீண்டும் விரைவாக திறக்கவும், வழக்கம் போல் அப்பகுதியில் கப்பல் போக்குவரத்தை அனுமதிக்கவும் வேண்டும் என்று ஈரானுக்கு, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரிக்கைவிடுத்துள்ள நிலையில், போர் தீவிரமாக நடைபெற்ற போது ஹோர்முஸ் நீர்வழிப்பாதையை தடுத்து மற்றும் அச்சுறுத்தி வைக்க அந்நாடு பதித்த கண்ணிவெடிகள் அனைத்தையும் அதனால் முற்றிலும் கண்டறிந்து அகற்ற முடியவில்லை என்று தகவல் வெளியாகி உள்ளது.

தற்போது வரை ஹோர்முஸ் நீரிணையின் குறிப்பிட்ட பாதையின் வழியாக மட்டுமேசர்வதேசநாடுகளின் கப்பல்கள் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இதனால் எரிபொருள் மற்றும் சர்வதேச வர்த்தக விநியோக நிலை சற்று இயல்புநிலைக்குத் திரும்பும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால் ஈரான் இந்த நீரிணையை முழுமையாக திறந்தால் மட்டுமே முற்றிலும் இயல்பு நிலை திரும்பும். ஆனால் ஈரான் படையால் அவர்கள் பொருத்திய கண்ணிவெடிகளை கண்டுபிடிக்க முடியவில்லை எனவும், அவை கடலின் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்க கூடும் என்றும் கூறப்படுகிறது. இதனால், ஹோர்முஸ் நீரிணையை முன்பை போல முழுவதுமாகத் திறக்க முடியாத சூழல் ஏற்பட்டு,சர்வதேச அளவில் எரிபொருள் விநியோகம் சீராகாமல் இருக்கும் சூழல் ஏற்பட கூடும் என அஞ்சப்படுகிறது. ஆனால் இது குறித்து ஈரான் அரசு எந்த ஒருதகவலையும் இன்னும் அதிகாரப்பூர்வமாக வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து வெளியாகி இருக்கும் அறிக்கை ஒன்றில் " கடந்த மாதம் ஹோர்முஸ்நீரிணையில் கண்ணிவெடிகளைப் புதைக்க ஈரான் படை சிறிய படகுகளைப் பயன்படுத்தியிருந்தது. ஆனால் அந்த கண்ணிவெடிகள் எங்கெங்கு புதைக்கப்பட்டன என்பதை ஈரான் முறையாகப் பதிவு செய்ததா என்பது குறித்த தகவல் தெளிவாக இல்லை" என்று தெரிவிக்கிறது. ஈரான் வைத்த கண்ணிவெடிகள், நீரோட்டத்தில் மிதந்தோ அல்லது நகர்ந்தோ சென்றிருக்கலாம், இதனால் அவை எங்கிருக்கிறது என்பதை ண்டறிவது கடினமாகிவிட்டது என்றும் கூறப்படுகிறது.

# Iran Supreme Leader Mojtaba Khamenei has severe, disfiguring wounds



*Iran's Supreme Leader Mojtaba Khamenei, reportedly is still recovering from severe injuries to his face and leg caused by the airstrike at the beginning of the war that killed his father.*

*US-Israeli forces launched an airstrike on the Supreme Leader's compound in Tehran at the start of the war in February in which his father and predecessor Ali Khamenei, was killed, and which led to significant injury to one or both legs of Mojtaba, news agency Reuters reported citing three people close to his inner circle. The 56-year-old is still recovering from his wounds but is mentally sharp.*

*The sources who spoke on the condition of anonymity also revealed that Mojtaba is engaged in major decision-making through audio conferencing. He is also involved in major issues, including the war and negotiations, the report added.*

*The US-Iran peace talks are set to be held in Pakistan's Islamabad over the weekend, for which the Iranian delegation arrived early on Saturday. The delegation includes foreign minister Seyed Abbas Araghchi, Iranian parliament speaker Mohammad Bagher Ghalibaf, defence and security officials, economic policy-makers, and lawmakers.*

*Mojtaba Khamenei's whereabouts, condition and ability to rule still largely remain a mystery to the public, with reports claiming he was unconscious and undergoing treatment.*

*Speculations have also been fueled by no photo, video or audio recording of him published since the air attack and his subsequent appointment as his father's replacement on March 8.*

*Last month, the Supreme Leader made his first statement since the start of the war, but did not appear on video. His message was read by a presenter on state TV.*

*Khamenei was wounded on February 28, the first day of the war launched by the US and Israel, in the attack that killed his father and predecessor Ayatollah Ali Khamenei. There has been no official Iranian statement on the extent of Mojtaba Khamenei's injuries.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.